## மாகாண வீதிகள் செயற்திட்டம் - செயற்திட்ட ஒருங்கிணைப்புக் கூறின் (பிஎம்யூ) - 2010

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2010 மார்ச் 31 இலிருந்து திசெம்பர் 31 வரையான காலத்திற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க செயற்திட்டத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மீளாய்விற்குட்பட்ட காலத்தின்போது விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்பும் அதிலிருந்தான பற்றுதல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2010 மார்ச் 31 இலிருந்து திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செயற்திட்டத்தின் செயற்திட்ட ஒருங்கிணைப்புக் கூறின் செலவினம் ரூபா. 19,782,300 ஆக இருந்தது. 2010 மார்ச் 31 இலிருந்து திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செலவினத்தின் பொழிப்பு பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| **செலவின விடயம்** | **2010 மார்ச் 31 இலிருந்து திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செலவினம்** |
|---|---|
| | ரூபா |
| தளபாடங்களுளம் பொருத்திகளும் | 2,799,630 |
| அலுவலக உபகரணம் | 2,358,828 |
| மோட்டார் வாகனங்கள் | 3,806,926 |
| புத்தகங்கள் | 18,000 |
| ஆலோசனைகள் | 1,127,500 |
| பயிற்சி | 3,008,254 |
| அதிகரிக்கும் மற்றும் செயற்பாட்டுக் கிரயம் | 6,663,162 |
| மொத்தம் | 19,782,300 |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, செயற்திட்ட ஒருங்கிணைப்புக் கூறு, செயற்திட்ட அமுலாக்கல் கூறு- ஊவா, செயற்திட்ட அமுலாக்கல் கூறு- கிழக்கு மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் கூறு- வடக்கு மாகாணம் என்பவற்றிற்காக நான்கு புறம்பான விசேட (டொலர்) கணக்குகள் திறக்கப்பட்டிருந்தன. மீளாய்விற்குட்பட்ட காலத்தின்போது செயற்திட்ட ஒருங்கிணைப்புக் கூறின் (பிஎம்யூ) விசேட (டொலர்) கணக்கிற்கான செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | யூ.எல். டொலர் | ரூபா |
|---|---|---|
| பெறப்பட்ட ஆரம்ப வைப்பு | 826,087 | 93,144,200 |
| கூட்டுக: மீள்நிரப்பல்கள் | இல்லை | இல்லை |
| | 826,087 | 93,144,200 |
| கழி:- பற்றுதல்கள் | 85,886 | 9,557,958 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | 1,458,705 |
| 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 740,201 | 82,127,537 |